பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி12 திங்கட்கிழமை 28.07.2025 கதிர் 261

## இனி இது ரகசியம் அல்ல!

“அரசசட்டத்தையும் மதத்தையும் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.“ இதனைச் சொல்லியிருப்பவர் ஒரு நீதிவான். அதுவும் ஒரு புத்த பிட்சுவிற்கே அவர் இதனைச் ☞2

# செம்மணி அகழ்வுக்காக சர்வதேச ஆய்வாளர்கள் அரசால் உடனடியாக வரவழைக்கப்படவேண்டும்

## உங்கள் நிபுணர்களை அனுப்புங்கள் என்று பன்னாட்டுச் சமூகத்திற்கும் சுமந்திரன் அழைப்பு



செம்மணியில் தோண்டப்பட்டுவரும் மனிதப் புதைகுழி ஆய்வுகளுக்காக பொருத்தமான சர்வதேச நிபுணர்கள் உடனடியாக வரவழைக்கப்படவேண்டும். அதற்கான அனுமதியை வழங்கி அவர்களுக்கு இந்த ஆளும்தரப்பு அழைப்புவிடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன்.

கறுப்பு ஜூலை நினைவேந்தலை ☞2

## இனியபாரதியின் மற்றொரு சகா கைது

இனியபாரதியின் சககாவான தொப்பிமனாப் என்றழைக்கப்படும் முன்னாள் திருக்கோவில் பிரசே சபை உறுப்பினரான விக்கினேஸ்வரன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அம்பாறை மாவட்ட தமிழ் பகுதிகளில் கடந்த காலத்தில் இனியபாரதி தலைமையில் இயங்கி வந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முகாம்கள் மற்றும் மயானங்களில் இரண்டு தினங்களாக சோதனை நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ☞2

## புதிய பிரதம நீதியரசராக பத்மன் சூரசேன பதவியேற்பு

இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக உச்ச நீதிமன்ற சிரேஷ்ட நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன நேற்றுக் காலை அரசுத் தலைவர் அலுவலகத்தில் அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்க முன்னிலையில் பதவியேற்றார்.

நாட்டின் 49 ஆவது பிரதம நீதியரசராக அவர் பதவியேற்றிருக்கிறார்.

பிரதம நீதியரசர் முர்து நிருபா பிந்துஷினி பெர்னாண்டோ ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து காலியாக இருந்த பதவிக்கு பிரீத்தி பத்மன் சூரசேனவின் பெயரை அரசுத் தலைவர் பரிந்துரைத்திருந்தார். அதனை அரசமைப்புச் சபை சமீபத்தில் அங்கீகரித்தது. ☞3

# செம்மணியில் நேற்று 5 எலும்புக்கூடுகள் மீட்பு






செம்மணிமனிதபுதைகுழிப்பகுதியில்அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானப் புதைகுழியிலிருந்து நேற்று 5 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டன. புதியதாக எலும்பு கூடு எதுவும் அடையாளம் காணப்படவில்லை.

சிந்துப்பாத்தி மயானத்தில் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01' மற்றும் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02' என நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு ☞2

## செம்மணி அகழ்வுப் பணியில் தரையை ஊடுருவும் ‘ராடர்’



யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் அமைந்துள்ள, அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியில் மேலும்மனிதஎலும்புக்கூடுகளை அடையாளம் காண்பதற்கும், அதனைச் சுற்றியுள்ள அயல் பிரதேசங்களிலும் மனிதப் புதைகுழிகள்இருப்பின்அவற்றை அடையாளம் காண்பதற்குமாக தரையைஊடுருவும்ராடர்(GPR – Ground Penetrating Radar) கருவியைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக தொழில்நுட்பம் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு, துரிதகதியில் ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

செம்மணிப் புதைகுழி வழக்கின் சாட்சிகளானஇலங்கைஇராணுவத்தினர் ஐவரும் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் செம்மணியில் பல நூற்றுக்கணக்கானவர்கள் புதைக்கப்பட்டனர் என்றிருக்கும் நிலையில், அந்தப் பகுதியில் உள்ள ஏனைய புதைகுழிகளையும் ☞3

## கடந்த காலக் கொடூரங்களுக்கு நீதி வழங்கும் வாய்ப்பை என்.பி.பி. ஆட்சியும் தவறவிட்டது

### மட்டு. நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குற்றச்சாட்டு



இலங்கையில் கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட படுகொலைகள், கொடூரங்களுக்கு நீதியை வழங்குவதற்குத் தனக்குக் கிடைத்த முதலாவது வாய்ப்பையே தவறவிட்டுள்ளது தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ் அரசுக் கட்சி மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்.

கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு சந்திவெளி விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞3

## இன அழிப்பு மனோநிலை இலங்கை ஆளும்தரப்புக்கு தொடர்ந்திருக்கிறது என்பதற்கு செம்மணியே சாட்சி

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

கூட்டாக இனத்தை அழிக்கின்ற மனோநிலை ஸ்ரீலங்கா அரசிற்கு தொடர்ந்தும் இருந்திருக்கின்றது என்பதையேசெம்மணிமனிதபுதைகுழியும் ஏனைய மனித புதைகுழிகளும் வெளிப்படுத்தியுள்ளனஎனதமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

செம்மணிப் புதைகுழிகளை வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரையில் 101 உடல்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன, ☞2

## மாகாண சபை முறை நாட்டுக்கு அவசியமா?

### திடீரென குண்டைத் தூக்கிப்போடும் தினேஷ் குணவர்தன

மாகாணசபைமுறைமைநாட்டுக்குஅவசியமா என்பதை மீள் சிந்திக்க வேண்டிய காலம் வந்திருக்கிறது. மாகாண சபை முறைமையை அப்படியே கொண்டு செல்வதா? அல்லது ☞3

## அணுமின் நிலையம் அமைப்பதற்கான 5 சாத்தியமான இடங்கள் அடையாளம்

அணுசக்திதிட்டத்தைமேம்படுத்தும் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, முதல் அணுமின் நிலையத்தை அமைப்பதற்கான ஐந்து சாத்தியமான தளங்களை இலங்கைஅடையாளம்கண்டுள்ளதாக சர்வதேச அணுசக்தி முகவரகம் உறுதிப்படுத்தியுள்ளது. ஜூலை 4 முதல் 18 வரை நடைபெற்ற ஆய்வுப் பணிகளுக்கு பிறகு இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆளும்தரப்பின் கோரிக்கையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒருங்கிணைந்த அணு ☞2

## இனி இது .....

சொல்லியிருக்கிறார்.

மீரிகம விஜய ராஜதஹன பகுதியில் உள்ள தொடருந்துத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியை ஆக்கிரமித்து வைத்துள்ள புத்த பிட்சுவிற்கே நீதிவான் இவ்வாறு தெரிவித்தார்.

அங்குள்ள தொடர்ந்து காப்புப் பகுதியில் சட்டவிரோதமாக ஒரு வீட்டைக் கட்டி அதில் வாழ்கிறார் அந்தப் புத்த பிட்சு. அதற்கெதிராக தொடருந்துத் திணைக்களம் அத்தனகல்ல நீதிவான் மன்றில் வழக்குத் தொடர்ந்தது. விசாரித்த நீதிமன்றம், புத்த பிட்சு இரு மாத காலத்திற்குள் அந்த இடத்தைவிட்டு வெளியேறவேண்டும் என்று உத்தரவிட்டார். பிட்சு தரப்பும் அதனை ஏற்றுக்கொண்டது. ஆனால் சொன்னபடி செய்யவில்லை. ஒரு மாத காலமாகியும் பிட்சு தொடர்ந்தும் அந்த இடத்தை ஆக்கிரமித்தபடியே உள்ளார்.

முந்தைய நாள் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இரண்டு மாதங்களுக்குள் சட்டவிரோத வீட்டை காலி செய்வதாக பிரதிவாதி நீதிமன்றத்தில் உறுதியளித்திருந்தார்.

ஜூலை 25 வழக்கு மீண்டும் நீதிமன்றில் அழைக்கப்பட்டபோது, பிரதிவாதி தரப்பினர் நீதிமன்றத்தின் உத்தரவுகளைப்புறக்கணித்து, இடத்தை விட்டு வெளியேறாமல் அங்கேயே வசித்து வருகிறார் என்று தொடருந்துத் திணைக்கள துணை ஆய்வாளர் பிரியந்த நந்தனதிலக தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த புத்த பிட்சுவின் தரப்பு வழக்குரைஞர், பிட்சு சார்ந்திருக்கும் விகாரையில் முக்கியமான சமய விழா ஒன்று நடத்தப்பவேண்டியிருப்பதால் அவரால் அந்த வீட்டை விட்டு வெளியேற முடியவில்லை என்று காரணம் தெரிவித்தார். அந்த விழா சிறப்புற இடம்பெறுவதற்கு ஏற்ற வகையில் நீதிமன்றம் பிட்சுவை அங்கிருந்து அகற்றக்கூடாது என்றும் விண்ணப்பம் செய்தார்.

இதற்குப் பதிலளித்தபோதே நாட்டின் சட்டத்தையும் மதத்தையும் போட்டுக் குழப்பிக்கொள்ளக்கூடாதுஎன்றுகூறினார். நாம் அனைவரும் சட்டத்தை மதிக்க வேண்டும், சட்டம் அனைவருக்கும் பொதுவானது என்று தெரிவித்த நீதிவான், ஒரு மாதத்திற்குள் சட்டவிரோத இடத்தைவிட்டு புத்த பிட்சு அகன்றுவிடவேண்டும் என்று கண்டிப்பாக உத்தரவிட்டார்.

இந்த வழக்குடன் தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரை குறித்து விடயத்தையும் ஒப்புநோக்குவதைத் தவிர்க்க முடியவில்லை. அங்கும் தனியார் மற்றும் அரச காணிகளில் சட்டவிரோதமாக ஒரு விகாரை கட்டப்பட்டிருக்கிறது என்று ஆளும்தரப்பு ஏற்றுக்கொண்டதன் பின்னரும் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல், சமாதானப் பேச்சுக்களை நடத்தலாம் என்கிறார்கள் சிங்கள அரசியல்வாதிகள். அவர்களோடு சேர்ந்த தமிழ் அரசியல்வாதிகளும் அதற்கு ஒத்தூதுகின்றார்கள். அப்படிப் பார்த்தால் நீதிவான் சொன்னதைப் போன்று "நீதி அனைவருக்கும் சமமானதுதானா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## செம்மணி அகழ்வுக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யொட்டி யாழ். வடமராட்சி, நெல்லியடி பஸ் நிலையம் -முன்பாக இடம்பெற்ற தீபந்தப் போராட்டத்தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார்.

நேற்றிரவு 7 மணியளவில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம்முன்னெடுக்கப்பட்டது. இதில்தமிழ் அரசுக்கட்சியின்பொதுச்செயலாளர்ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தலைமையில், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றிய சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தமிழ் இனத்தை அழிப்பதற்காகச் செய்யப்பட்ட கோரச் சம்பவங்களின் ஆதாரங்களாக இன்று செம்மணியில் நூற்றுக்கும் மேற்பட்ட மனித எலும்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. இந்த ஆதாரங்களை மூடி மறைத்துவிடக்கூடாது. இந்த ஆதாரங்கள் உலகில் அனைவருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டப்படவேண்டும். இவற்றை சரியான முறையிலே சர்வதேசம் ஆராய்வதற்கும், விசாரிப்பதற்கும் இலங்கை ஆட்சியாளர்கள் எந்தவிதமான தடங்கல்களையோ தடைகளையோ விதிக்கக்கூடாது. சர்வதேச ரீதியிலே இந்த விசாரணைகள்வெளிப்படைத்தன்மையோடு நடைபெறவேண்டும்என்றுநாங்கள்திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றோம்.

விசேடமாக இந்த மனிதப் புதைகுழிகள் அகழ்வாய்வு செய்யப்படுகின்றபோது, அதற்கான போதிய தொழில்நுட்ப வசதிகள் இலங்கையில் இல்லை. இலங்கை அரசினால் செய்யப்பட முடியாத விடயமாக அது இருக்கின்றது. ஆகவே சர்வதேச சமூகத்திடம் இந்த அகழ்வாராய்ச்சிக்கான தகுதியுடையவர்களை உடனடியாக இலங்கைக்குள்ளே அனுமதிக்கவேண்டும் அதனை இலங்கை ஆட்சியாளர்கள் செய்யவேண்டும். இலங்கை அரசு அனுமதித்து அழைத்தால்தான் இந்த அகழ்வாய்வுகளைச் சரியான முறையிலே, இந்த நிமிடத்திலிருந்தாவது சரியாக ஆய்வுக்குட்படுத்த முடியும்.

இலங்கைஅரசுஇதுதொடர்பில்விசாரணை நடத்தும் அருகதையற்றதாகக் காணப்படும் நிலையில், உங்களால் இது முடியாது என்கிறபோது, இந்தஆய்வுகளைமேற்கொள்ள தகுதிவாய்ந்த சர்வதேச ஆய்வாளர்கள் உடனடியாக வரவழைக்கப்படவேண்டும், அவர்களுக்குஅனுமதிவழங்கப்படவேண்டும் என்பதேநாம்அரசுக்குக்கொடுக்கும்அழுத்தம்.

யார் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள், எந்தெந்த ஆட்சியாளர்கள், ஆளும்தரப்பினர், எந்தெந்த இராணுவத்தினர் இதனைச் செய்திருக்கிறார்கள் என்பது கண்டறியப்படவேண்டும். உண்மை கண்டறியப்பட்டால்தான் நாட்டிலே நல்லிணக்கம் ஏற்படமுடியும். நல்லிணக்கத்திற்குப் பாதகமாக நாங்கள் பொறுப்புக்கூறலை செய்யக்கூடாது என்று ஆளும்தரப்புச் சொல்வது அபத்தமான ஒரு கருத்து. உண்மையின் அடிப்படையிலேதான் நல்லிணக்கம் ஏற்படமுடியும். ஆனால், இந்த உண்மைகளைக் கண்டறிவதற்கு இலங்கை அரசிற்குத் தகுதி கிடையாது என்பதால் சர்வதேச ஆய்வாளர்கள் உடனடியாக வரவழைக்கப்படவேண்டும்.

சர்வதேசத்திடம் நாம் கேட்டுக்கொள்வது, இப்படியான மிக மோசமான படுகொலைகள் நடந்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே உங்களுடைய தகுதிவாய்ந்த நிபுணர்களை இங்கேஅனுப்புங்கள், இதுசரியானவிதத்திலே ஆராயப்படவேண்டும்.

இது சர்வதேசக் குற்றம், இது உலக அரங்கிலே மிக மோசமான ஒரு இனப் படுகொலை, இதற்கு நீதி கேட்டு நிற்கின்ற ஒரு சமூகமாக மீண்டும் இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும்படி நாம் சர்வதேசத்திடத்திலே முன்வைக்கிறோம். இது தீர்க்கப்படவேண்டிய ஒன்று. இந்த விடயம் ஒரு அரசியல் தீர்வினால் மட்டுமல்ல பொறுப்புக்கூறலினாலுமே, இதற்குப் பொறுப்பானவர்கள் சரியான முறையில் தண்டிக்கப்படும் முறையினாலேதான் மீள நிகழாமைக்கான ஒரு உத்தரவாதம் எங்களுடைய மக்களுக்குக் கிடைக்கும்.

## அணுமின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்கட்டமைப்பு மீளாய்வுப் பணிக்குழு, 2022ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் கட்ட சர்வதேச அணுசக்தி முகவரகத்தின் மீளாய்வுகளில்வழங்கப்பட்டபரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை மதிப்பிட்டது. இந்தப் பணிக்குழுவில் பல்கேரியா மற்றும் துருக்கி நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களும் உள்ளடங்கியுள்ளனர்.

அணுசக்தி உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளதாக சர்வதேச அணுசக்தி முகவரகம் குறிப்பிட்டது. குறிப்பாக, உலைகொள்முதல் செய்வதற்கான ஒரு மேலாண்மை கட்டமைப்பை இலங்கை நிறுவியதுடன், விரிவான அணுசக்தி சட்ட வரைவையும் உருவாக்கியுள்ளது. மேலும் 2025-2044 ஆம் ஆண்டுக்கான தேசிய நீண்டகாலஎரிசக்திதிட்டத்தில் அணுசக்தியைச் சேர்த்துள்ளது.

இலங்கையின் அணுசக்தி முயற்சி முதன்முதலில் 2010ஆம் ஆண்டில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டில் அணுசக்தித் திட்ட அமலாக்க அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் எரிசக்தி அமைச்சு, இலங்கை அணுசக்தி அதிகாரச் சபை, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை அணுசக்தி ஒழுங்குமுறை மன்றம் ஆகியவை அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## செம்மணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றன.

இரண்டாம் கட்டப் பணிகளுக்காக 45 நாட்கள்நீதிமன்றினால்அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இரண்டாம் பகுதி அகழ்வு பணிகள் நேற்று 22ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதுஇரண்டுமனிதபுதைகுழிகளில் இருந்தும் இன்றைய தினம் 05 எலும்பு கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

அதேவேளை செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 31 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது, இன்றைய தினத்துடன் 95 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நீதிவான் ஆனந்தராஜாவின் கண்காணிப்பில்மேற்கொள்ளப்படும்அகழ்வுப் பணி தொல்லியல் பேராசிரியார் ராஜ்சோம தேவா, சட்ட வைத்திய அதிகாரி பிரணவன், யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல் துறை விரிவுரையாளர்கள், தொல்லியல் துறை மாணவர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

இதுவரை 101 மனித எலும்பு கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. நாளையதினமும்அகழ்வுப்பணிதொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளன.

## இன அழிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிகமாகவும் பல உடல்கள் உறுதிப்படுத்தப்படக்கூடிய நிலையில் காணப்படுகின்றன. இந்த மனிதப்புதைகுழி என்பது கிட்டத்தட்ட 1996ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து மூடிமறைக்கப்பட்ட ஒரு விடயம்.

அப்போது செம்மணியில் 15 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அன்றைய சந்திரிகாகுமாரதுங்க அரசாங்கம் அன்றைய வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை பயன்படுத்தி இது கிருஷாந்தி குமாரசுவாமிகொலைவழக்கில்குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட சோமரட்ண ராஜபக்ஷ எரிச்சலால், ஆளும்தரப்பின்மீதானகோபத்தில் சொன்னபொய்என்றகோணத்தில்உலகையே நம்பவைத்ததுதான்அன்றையகாலத்திலிருந்து இன்றுவரைக்கும் காணப்படுகின்றது.

போர்நடைபெற்றகடைசிக்காலப்பகுதியிலே இடம்பெற்ற இனஅழிப்பை கூட மூடிமறைத்து ஒரு உள்ளக விசாரணை என்ற பெயரிலே , அதனையும் படிப்படியாக குறைத்து அதனையும் உண்மையும்,நல்லிணக்க ஆணைக்குழுவுடன், எந்தவித குற்றவியல் விசாரணைகளையும் நடத்தாமல் மூடிமறைப்பதைத்தான் மாறிவந்த ஒவ்வொரு அரசாங்கமும் செய்துகொண்டிருந்தது.

முற்றுமுழுதாக மறைப்பதற்கான ஒரு முயற்சியை சர்வதேசசமூகமும் சேர்ந்து செய்து வந்த செயலில்தான் இந்த செம்மணி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எங்களை பொறுத்தவரை செம்மணி கண்டுபிடிப்பு இரண்டுவிடயங்களிற்குமுக்கியமானது.ஒன்று இன அழிப்பிற்கு இது ஒரு முக்கியமான ஆதாரம்,கூட்டாக இனத்தை அழிக்கின்ற மனோநிலை ஸ்ரீலங்கா அரசிற்கு தொடர்ந்தும் இருந்திருக்கின்றது .

அது ஒரு குறிப்பிட்ட சம்பவம் மாத்திரமல்ல, அது தொடர்ச்சியாக காலம்காலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. செம்மணியொன்று, முல்லைத்தீவிலே கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழி, மன்னார் இவைஎல்லாம்எதனைவெளிப்படுத்துகின்றது என்றால் , கூட்டாக அழிக்கின்ற ஸ்ரீலங்கா அரசின் மனோநிலையையே இவை வெளிப்படுத்தியுள்ளன.

சர்வதேசசமூகம் விசாரணைகளை இறுதிப்போரின் இறுதிகாலகட்டத்துடன் மட்டுப்படுத்த முயல்கின்ற நிலையில் செம்மணிமனிதபுதைகுழிகண்டுபிடிக்கப்பட்ட அவ்வாறு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரணைகளை மட்டுப்படுத்துவது பொருத்தமற்றது,நீதியானது இல்லைஎன்பதை சொல்லிநிற்கின்றது.நிரூபித்திருக்கின்றது.

அனைத்து கோணங்களிலும் நாங்கள் பார்க்கின்ற போது தமிழர்களின் இனப்படுகொலைக்கான ஆதாரங்களை தேடுகின்ற இந்த போராட்டத்தினை நாங்கள் அவதானிக்கின்ற போது செம்மணி ஒரு திருப்புமுனை என்றுதான் சொல்லவேண்டும். உண்மையிலேயேநாங்கள்கிருபாகரனிற்கும் நன்றி சொல்லவேண்டும்.

அவர் இந்த விடயத்தை எங்களிற்கு சொன்னது மாத்திரமல்ல,அவர் அரியாலை பகுதியை சார்ந்தவர் என்ற அடிப்படையிலே அந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை தனிப்பட்ட முறையில் அறிந்தவர் என்ற அடிப்படையில் இது செம்மணியின் ஒரு அங்கம் என்பதை எங்களிடம் ஆணித்தரமாக சொன்ன இடத்தில்தான் அவர் அந்தவிடயத்தை எடுத்து பொலிஸிற்கு முறைப்பாடு செய்து - தனக்குஎத்தனையோஅச்சுறுத்தல்வரக்கூடிய நிலையில்தான் அவர் இதனை செய்தவர்.

அதன் இன்னுமொரு பரிமாணமாக நாங்கள் இந்த செம்மணியின் முழுமையான விசாரணையை சர்வதேச மட்டத்தில் எடுத்துச்செல்வதற்கும், அதனை உறுதி செய்வதற்கும் நாங்கள் எங்கள் முயற்சிகளை தீவிரப்படுத்துவோம் .

## இனியபாரதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாறை திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட 2005 மற்றும் 2008க்கு இடையில் கிழக்கு மாகாணத்தில் நடந்த கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், துப்பாக்கிகளைப் பயன்படுத்துதல், சித்திரவதைக் கூடங்களை நடத்துதல், மிரட்டிப் பணம் பறித்தல் போன்ற சம்பவங்களுடன் தொடர்புபட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த இனியபாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோர் ஜூலை 6 திருக்கோவில் மற்றும் மட்டுசந்திவெளிபகுதிகளில்வைத்துஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த கைதையடுத்து இனியபாரதியின் முன்னாள் சாரதியான செந்துரான் ஜூலை 9 கல்முனை நகரில் வைத்துக் கைது செய்யப்பட்டார். பொத்துவிலில் இருந்து மட்டக்களப்புக்குதனியார்பேருந்தைச்செலுத்தி சென்றபோது அவர் கைதுசெய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில்நேற்றுச்சனிக்கிழமைபிற்பகல் 2 மணிக்கு கொழும்பில் இருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தம்பிலுவில் மகாவித்தியாலயத்துக்கு அருகில் பாடசாலை வீதியில் 2004 ம் ஆண்டு தொடக்கம் இயங்கி வந்த இனிய பாரதியின் காரியாலயத்தை முற்றுகையிட்டு சோதனையில் ஈடுபட்டனர்.

அவ்வாறே தம்பிலுவில் பிரதான வீதியில் இயங்கிவந்ததமிழ்மக்கள்விடுதலைப்புலிகள் முகாம், தம்பட்டையில் இயங்கி வந்த முகாம், திருக்கோவில் மயானம் போன்றவற்றுக்கு சென்று சோதனையில் ஈடுபட்டதுடன் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள தாளவெட்டுவான் சந்திக்கு அருகாமையில் உள்ள பெரும் வீட்டையும் சோதனையிட்டனர். ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களை வெள்ளை நிற ஆடையில் இரு வெவ்வேறு ஜீப்களில் அழைத்து வந்து அந்த வீட்டில் சோதனை நடத்தப்பட்டது.

இதன் பின்னர் சம்மாந்துறையில் செயற்பட்டமுகாம்உட்படஅந்தககாலபகுதியில் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முகாங்களாகச் செயற்பட்ட இடங்களையும் சென்றுபார்வையிட்டனர். அங்குசந்தேகத்துக்கு இடமாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் நிலத்தை தோண்டி சோதனையிடுவதற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்துவருகின்றனர்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் விடுதலைப்; புலிகள் கட்சியைச் சேர்ந்த இனிய பாரதியின் மற்றும் ஒரு சகாவான திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த முன்னாள் பிரதேச சபை உறுப்பினரான தொப்பிமனாப் என்றழைக்கப்படும் சின்னத்தம்பி விக்கினேஸ்வரன் அவரது வீட்டில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை3.00மணியளவில்குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

இதேவேளை, குற்றப் புலனாய்வுத் துறையின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு, 2005 மற்றும் 2008 க்கு இடையில் கிழக்கு மாகாணத்தில் நடந்த கொலைகள், கடத்தல்கள், காணாமல்

தொடர்ச்சி 3 ம் பக்கம்.....

காலைக்கதிர் Kalaikkathir

## இனியபாரதியின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதல்கள், துப்பாக்கிகளைப்பயன்படுத்துதல், சித்திரவதைக் கூடங்களை நடத்துதல் மற்றும் மிரட்டி பணம் பறித்தல் குறித்து நீண்ட விசாரணையை மேற்கொண்டு வருகிறது..

இந்த விசாரணையில், முதல் சந்தேக நபரான இனியபாரதி 2004 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறிய கருணா அம்மான் பிரிவின் திருக்கோவில் பகுதியில் உள்ள ஆயுதமேந்திய முகாமின் தலைவராகப் பணியாற்றியவர்.

இவர் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் கருணா அம்மான் உருவாக்கிய தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அரசியல் கட்சியின் அம்பாறை மாவட்ட அரசுத் தலைவர் ஒருங்கிணைப்பு அதிகாரியாகப் பணியாற்றியவர் என்பதுடன் 2012 முதல் 2015 வரை அந்தப் பிரிவு பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினராகவும் பணியாற்றியவர். அந்தக் காலப் பகுதியில் பல படுகொலை மற்றும் ஆட்கள் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

## மாகாண...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியே முடித்துக் கொள்வதா? அல்லது அதனை முழுமையாக மறுசீரமைப்புச் செய்வதா என்பது தொடர்பில் நாடளாவிய ரீதியில் கலந்துரையாடல்களும் மீளாய்வும் இடம்பெற வேண்டியது அவசியம் என்று முன்னாள் பிரதமரும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

40 வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமை இன்றைய அரசியல் சவால்களை எதிர்கொள்கிறதா என்பதை நாம் ஆராய வேண்டும். மேலும் மாகாண சபை முறையின்றி கடந்த பல வருடங்களாக நாடு இயங்கி இருக்கிறது என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும் எனவும் தினேஷ் குணவர்தன சுட்டிக்காட்டினார்.

கடந்த 2014ஆம் ஆண்டு இறுதியாக ஊவா மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டதன் பின்னர் இன்னும் மாகாண சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்படவில்லை. கிட்டத்தட்ட 06, 07 வருடங்களாக தேர்தல்கள் நடத்தப்படாமல் தாமதமாகி வருகிறது.

மாகாணசபைத்தேர்தல்களைநடத்துவதில் தேர்தல் முறை தொடர்பான சட்ட சிக்கல் காணப்படுவதால் அதனை நிவர்த்தி செய்ய வேண்டும்எனவும்தெரிவிக்கப்பட்டுவருகிறது.

இந்நிலையில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில்அமைப்புகள்என்பனமாகாணசபைகள் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. ஆளும்தரப்பைப் பொறுத்தவரையில் அடுத்த வருடம் மாகாண சபைத்தேர்தல்நடத்தநடவடிக்கைஎடுக்கப்படும் என தெரிவித்து வருகின்றது. முதலில் அது இந்த வருட இறுதிக்குள் நடத்தப்படும் என்று தெரிவித்து வந்தது.

இந்த நிலையிலேயே முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன திடீரென இந்தக் குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார். அவர் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைகள் இன்றி நாடு பல வருடங்கள் பயணித்திருக்கிறது. எனவே, இதற்குப் பின்னரும் இந்த மாகாண சபை முறை நாட்டுக்குத் தேவையா என்று சிந்திக்கவேண்டும். மாகாண சபையூடாக மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. மாறாக இதற்குப் பெருமளவு நிதி செலவிடப்படுகிறது. எனவே, மாகாண சபை நாட்டுக்கு தேவையா என்பது தொடர்பில் மீளச் சிந்திக்கவேண்டிய காலம் உருவாகியிருக்கிறது.

இது தொடர்பில் சகல தரப்பினரும் கலந்துரையாட வேண்டும். தமது யோசனைகளை முன்வைப்பது அவசியம். மாகாண சபை முறைமை தொடர்பாக முழுமையானமீள்சிந்தனைஅவசியமாகிறது. மாகாண சபை முறைமையை அப்படியே கொண்டு செல்வதா? அல்லது அதனை முழுமையாக மாற்றியமைப்பதா? அல்லது அதனை இல்லாமல் செய்வதா? என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கவேண்டும்.

இன்றைய காலகட்ட சவால்களுக்கு இந்த மாகாண சபை முறைமை பதில் அளிக்கிறதா என்பது குறித்து சிந்திக்கவேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாக இயங்குகின்றன. நாட்டின் சகல பகுதிகளுக்குமான அபிவிருத்தியில் நாடாளுமன்றஉறுப்பினர்கள்பங்கெடுக்கலாம். எனவே, இடையில்மாகாணசபைஅவசியமா? என்ற கேள்வி எழுகிறது. இலங்கையில் மாகாண சபையானது அரசியல்வாதிகளுக்கு நாடாளுமன்றம் செல்வதற்கான ஒரு இடைப் பாலமாகவே இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

கல்வி, சுகாதாரம், முதலீடுகள், விளையாட்டு உள்ளிட்ட விடயங்களில் மாகாண மட்டத்தில் பரந்துபட்ட வகையில் செயல்பட ஒரு பொறிமுறைஅவசியம். அதனைநாடாளுமன்ற உறுப்பினர்களே செய்யலாம். தற்போதுகூட மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களே தலைமைதாங்குகின்றனர். எனவே இதற்கு மாகாண சபை முறைமை தேவையற்றதாகவே நாங்கள் கருதுகிறோம். இது தொடர்பில் பேச்சு நடத்த முடியும். ஆனால் கடந்தகாலங்களில் இதில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. வடக்கில் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் இருந்த காலத்தில்கூட அங்கு மிகப் பெரிய மாற்றங்களோ அபிவிருத்திகளோ இடம்பெறவில்லை என்றார்.

2017ஆம் ஆண்டு மாகாண சபை முறைமையானது தொகுதி மற்றும் விகிதாசார என்ற கலப்பு முறைமைக்கு மாற்றப்பட்டது. எனினும், அதனுடன் கூடிய எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டதால் தேர்தலை எந்த முறையிலும் நடத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

புதிய முறைமையில் தேர்தலை நடத்துவதாயின்எல்லைநிர்ணயஅறிக்கையை திருத்த வேண்டும். அல்லது பழைய முறைமையில் தேர்தலை நடத்த வேண்டும். அதற்கு டாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றவேண்டும்.

இந்தப் பின்னணியிலேயே தற்போது மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையில் நடத்துவதற்காக நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.

## செம்மணி ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடிக்க புதிய நவீன தொழில்நுட்பங்களைப்பயன்படுத்தவேண்டும் என்று காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் வலியுறுத்தப்பட்டு வந்தது.

இந்தக்கோரிக்கைகளைஅடுத்து, ஜி.பி.ஆர். ஸ்கானிங் இயந்திரம் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது. அவற்றின் மூலம் ஆய்வுகளை நடத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இலங்கையில் இதுவரை முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் போன்ற இடங்களில் புனியூணூ ஸ்கானர் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், தரையை ஊடுருவும் ராடர் (GPR) பயன்படுத்தப்படும் முதலாவது இடமாக செம்மணி புதைகுழி பதியப்படுகிறது.

இந்த ராடர் அமைப்பு, காங்கிரீட் போன்ற தடைகளை ஊடுருவி, நிலத்துக்குக் கீழ் இருக்கும்பொருட்கள்மற்றும்உடற்கூறுகளை திரையில் காண்பிக்கக்கூடிய நவீன தொழில்நுட்பமாகும். கனடாபோன்றநாடுகளில் மனிதப் புதைகுழிகளை கண்டறியவும் இது பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், ஆய்வுப் பணிகளை எளிதாக்கும் வகையில் செம்மணிப் புதைகுழிக்கு அருகிலுள்ள பகுதிகள் சுத்தம் செய்யப்படுகின்றன. இந்த ஸ்கானிங் மூலம் மேலும் பல எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்படக்கூடும் என நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்நிலையில், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் விரைவில் இந்த பரந்துபட்ட ஸ்கான் நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ளன.

## புதிய பிரதம....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1989 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக பதவியேற்ற பிரீத்தி பத்மன் சூரசேன, பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து அரச தரப்பு சட்டத்தரணியாக பணியாற்றி 2007 ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

2016 ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட அவர், 2018 ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவராகவும், 2019 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற நீதியரசராகவும் நியமிக்கப்பட்டார்.

அது தொடக்கம், உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்து வந்த பிரீத்தி பத்மன் சூரசேன, முன்னாள் பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோவுக்குப் பிறகு இருக்கும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் சிரேஷ்ட நீதியரசர் ஆவார்.

அரசுத்தலைவர் யின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டார்.

## கடந்த காலக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

கறுப்புஜூலைநிகழ்வானதுவருடந்தோறும் கட்டாயமாக நினைவுகூரப்படவேண்டிய ஒன்றாகும். இவ்வாறான கொடூரமான சம்பவங்கள் நடைபெற்றமையினை எமது இளைஞர்களுக்கு தெளிவாக எடுத்துக்கூறவேண்டும்.

2009ஆம் ஆண்டு வரை நடைபெற்ற அனைத்து படுகொலைகளுக்கும் துரதிஷ்டவசமாக இலங்கை அரசிடம்தான்




நீதியை எதிர்பார்த்து நிற்கவேண்டியிருக்கிறது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தொடர்ச்சியாக சர்வதேச விசரணைவேண்டும் எனவும், சர்வதேச மேற்பார்வை வேண்டும் எனவும், சர்வதேசஅழுத்தம்இருக்கவேண்டும்எனவும், சர்வதேசம் தலையிடவேண்டும் எனவும் எத்தனையோ முறை அழுத்தம் கொடுத்தும், இதுவரையில் அது சாத்தியப்படவில்லை.

இலங்கை அரசு ரோம் சட்டத்தில் கைச்சாத்திடவில்லை. அதனால் அதனை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்லமுடியாது என்று சர்வதேச சமூகம் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றார்கள். தமிழ் அரசுக் கட்சியானது தொடர்ந்தும் சர்வதேச விசாரணையினைக்கோரினாலும்இலங்கை ஆளும்தரப்பு தொடர்ச்சியாக அதனை மறுத்து வருகின்றது.

முன்னர் இருந்த ஆளும்தரப்புக்களும் இந்தப் படுகொலைகளுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதில்பின்நின்றன. ஏனென்றால் அவர்களும் அவற்றில் சம்பந்தப்பட்டவர்கள். நாடுசுதந்திரமடைந்ததன்பின்னர்நடைபெற்ற படுகொலைகள் அனைத்தும் மாறி மாறி வந்த ஆளும்தரப்பினரால் தமிழர்களுக்கு எதிராகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது ஆட்சிக்கு வந்துள்ள ஜே.வி.பி. கட்சி 2024ஆம் ஆண்டு வரை எந்தக் காலப் பகுதியிலும் ஆட்சி செய்யாமையின் காரணமாக நடைபெற்ற படுகொலைகளுக்கு நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கை பல தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதற்கான முதலாவது சந்தர்ப்பத்தை தற்போதைய ஆளும்தரப்பும் தவறவிட்டுள்ளது.

அண்மையில் நாட்டிற்கு வருகைதந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம தமிழ் அரசுக் கட்சி சர்வதேச விசாரணை தேவை என்று கூறியபோது, இலங்கை ஆளும்தரப்புஉள்நாட்டுபொறிமுறையினூடாக மாத்திரம்தான் தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதைக்கையாளப்போகின்றோம் என்று மிகத்தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

ரணில்விக்கிரமசிங்கவினால்சொல்லப்பட்ட உண்மை அறியும் ஆணைக்குழுவைத் தான் பயன்படுத்த போகின்றார் என அமைச்சர் விஜித ஹேரத் சொல்லியுள்ளார். அந்தப் பொறிமுறையும் தமிழர்களால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட ஒன்று. எனவே ஆளும்தரப்பின் ஊடாகவும் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நீதியும் கிடைக்கப்போவதில்லை என்பது உறுதியாகத் தெரிகின்றது.

நீதியை வழங்குவதன் ஊடாக எந்தவொரு தேசிய மக்கள் சக்தி கட்சியினரும் பாதிக்கப்படப்போவதில்லை. அப்படியிருந்தும் அதனை மறுக்கின்றார்காள் என்றால் இவர்களும் பெரும்பான்மை இனத்தைப் பாதுகாப்பதில் தெளிவாக இருக்கின்றார்கள் என்பது தெரிகிறது.

தமிழ்அரசுக்கட்சியைஉடைக்கவேண்டும் என்றும், பலவீனமாக்க வேண்டும் எனவும் சில தமிழ் கட்சிகள் உழைக்கின்றன. யாழ். குடா நாட்டிற்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட கட்சிகள் வடக்கு, கிழக்கு மக்களின் தேசியப் பிரச்சினை தொடர்பாக எப்படிப் பேசமுடியும்? தமிழ் அரசுக் கட்சியை விமர்சிப்பதை மாத்திரமே இவர்கள் தங்கள் கொள்கையாகக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கெதிராக நடைபெற்ற அநீதிகளுக்கெதிராக மக்கள் தொடர்ந்தும் குரல் கொடுக்கின்றார்கள். இதனைதமிழ்அரசுக்கட்சி முன்னெடுக்கின்றது. தமிழ்மக்கள்தமிழ்அரசுக் கட்சியுடன் உள்ளார்கள் என்ற செய்தியைச் சொல்லவும்வருடந்தோறும்நினைவேந்தல்கள் செய்துகொண்டிருக்கின்றோம்.

தமிழ்மக்கள்இந்நாட்டிற்குள்ளேஅகதிகளாக வாழக்கூடாது என்றால் - நிரந்தரமான - மீளப்பெறமுடியாத அதிகாரங்களுடன்- அரசியல் தீர்வொன்றுவேண்டும். அரசியல் தீர்வு விடயத்திலும் இந்த ஆளும்தரப்பு பின்வாங்குகின்றது என்பதைத்தான் சொல்லவேண்டும்.

அதிகாரப்பகிர்வுடன்கூடியமாகாணசபைத் தேர்தலை நடத்துவதைக்கூட ஆளும்தரப்பு இழுத்தடிக்கின்றது. நிரந்தரமான அரசியற் தீர்வை ஒரு புதிய அரசமைப்பினூடாக கொண்டுவருவதற்குகாலதாமதமானாலும்கூட, உடனடியாக செய்யக்கூடியாக மாகாண சபைத்தேர்தலை நடாத்தலாம். ஆனால் ஆளும்தரப்பு அதனையும் இழுத்தடிக்கிறது. இந்த ஆளும்தரப்பும் மாகாண சபை முறைமையைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளையே முன்னெடுத்துச் செயற்படுத்துகின்றது என்றார்.




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அழுத்தம் போதுமானதா?

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் இடம்பெற்று வரும் மனிதப் புதைகுழி அகழ்வாய்வுப் பணிகள் மீண்டும் ஒரு முறை இலங்கையில் நடந்துகொண்டிருக்கும் போர் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவை மீதான கவனத்தை உலகளவில் ஈர்த்துள்ளன. இது தொடர்பாக நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வரும் சர்வதேச விசாரணை கோரிக்கைகளுக்கு மேலும் ஒரு நியாயமான தருணம் உருவாகியுள்ளது.

இந்நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன், தற்போது செம்மணியில் நடைபெறும் அகழ்வாய்வுப் பணிகளில் உடனடியாக சர்வதேச நிபுணர்கள் கலந்து கொள்வது அவசியம் என வலியுறுத்தியிருக்கிறார். இது ஒரு அரசியல் ரீதியிலான முக்கியமான அறிக்கையாகவே பார்க்கப்படுகின்றது. கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில், இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறைகளின் மூலமாக நீதியை எதிர்பார்ப்பது வெறும் ஏமாற்றமாக முடிந்துள்ளது என்பது தெளிவான உண்மையாகின்றபோது இது தவிர்க்க முடியாததொரு கோரிக்கைதான்.

இலங்கை ஆளும்தரப்பு வழக்கமாகவே, இவ்வாறான அகழ்வாய்வு பணிகளை அல்லது விசாரணைகளை உள்நாட்டு சட்ட நடைமுறைகளுக்குள் வைத்து முடிக்கவே விரும்புகிறது. இது, பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நியாயம் வழங்குவதற்கும், உண்மையை வெளிப்படுத்துவதற்கும் பெரும் தடையாக இருந்து வந்திருக்கிறது. சர்வதேச நிபுணர்களின் பங்களிப்பே, ஒரு துல்லியமான, விசுவாசமான, அரசியல் தலையீடற்ற, நடுநிலையான விசாரணைக்கு வழிவகுக்கக் கூடியது என்கிற உண்மை இங்கு உணரப்படுவது முக்கியம்.

இந்த நிலைக்கு சர்வதேசத்தின் கண்களை திருப்ப வைக்க, வெறும் ஊடக பேச்சுக்கள் மட்டும் போதுமானதல்ல. அதையும் தாண்டிய காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம். தமிழர் சமூகத்திலுள்ள அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், ஊடகவியலாளர்கள், உரிமைகள் ஆதரவாளர்கள் இணைந்து திட்டமிட்டு கூடிய அழுத்தங்களை உருவாக்கவேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஒருசில ஆர்ப்பாட்டங்கள், சின்னச் சின்ன ஊர்வலங்கள், செய்தியாளருக்கான அறிக்கைகள் இவ்வாறான ஒரு மாபெரும் நீதி தேடல் செயற்பாட்டுக்கு போதுமானவையல்ல.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குள்ளும் அதற்கு வெளியே இராஜதந்திர மட்டங்களிலும் அழுத்தம் தரும் நடவடிக்கைகள் முழு வீச்சில் அதிகரிக்கப்படவேண்டும். கடந்த காலங்களிலும் இத்தகைய அழுத்தங்கள் வழங்கப்பட்டும் அவை கானல்நீராகிப் போனமையைக் கவனத்தில்கொண்டு இம்முறை நன்கு திட்டமிட்ட வகையிலான அழுத்தம் வழங்கப்படுவது முக்கியம்.

இந்தமுறை சர்வதேசத்துக்கு அளிக்கப்படும் அழுத்தம் முன்னையவைகளைவிட வித்தியாசமானதாகவும், நுட்பமானதாகவும் இருக்கவேண்டிய அவசியம் உள்ளது. காரணம், ஒவ்வொருமுறையும் சர்வதேசம் ‘இலங்கை அரசு விசாரிக்கலாம்’ என்று முன்வைத்ததற்கான வாய்ப்புகளை இலங்கை அரசு சரியாகச் பயன்படுத்தவில்லை என்பது தெளிவாகவும், ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலும் வலியுறுத்தப்படவேண்டும். தற்போதைய ஆளும்தரப்பு முன்னைய ஆளும்தரப்புக்களின் அடியொட்டியே இது விடயத்தில் செயற்படுகின்றது என்பதையும் சர்வதேச சமூகத்திற்கு ஐயம் திரிபுற எடுத்தியம்பவேண்டிய கட்டாயமும் இருக்கின்றது.

அதனால் தான், செம்மணி புதைகுழி போன்று உறுதியான சான்றுகளுடன் கூடிய விசாரணைகளுக்குப் போதிய அழுத்தத்தை வழங்கும் வலுவான, தெளிவான மற்றும் சட்ட ரீதியான சர்வதேச ஆர்வத்தை உருவாக்க தமிழ் அரசியல் கட்சிகள் இன்னும் பாடுபடவேண்டியிருக்கிறது. இதற்கான ஒரு சமூகப் பேரெழுச்சியை உருவாக்க அவை முன்வரவேண்டும். மக்களோடு இரண்டறக் கலந்து இது விடயத்தில் அவர்களின் பங்களிப்பை அதிகரிக்கவேண்டும். கட்சி சார்ந்த ஒரு சிலரோடு மட்டும் நடத்தப்படும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களால் எதிர்பார்க்கப்படும் அழுத்தத்தை ஏற்படுத்திவிட முடியாது. பதிலாக, மக்களின் பேரெழுச்சியே அந்த அழுத்தத்தை வழங்கும் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

# மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பொலிஸ் விசாரணைக்கு அழைப்பு

மட்டக்களப்பு உதவி பொலிஸ்மா அதிபர்காரியாலயத்திலிருந்து மனித உரிமை செயற்பாட்டாளர் சிவயோகநாதனுக்கு விசாரணைக்கான அழைப்பாணைஅனுப்பப்பட்டுள்ளது.

27.07.2025 காலை 10.10 மணிக்கு மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் இருந்து மனித உரிமை செயற்பாட்டாளர் சிவயோகநாதன் அவர்களது வீட்டிற்குச் சென்ற மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் உத்தியோகத்தரால் சிங்களத்தில் ஒரு கடிதம் வழங்கப்பட்டது. கடிதம் சிங்களத்தில் உள்ளதால் அது தனது மொழி உரிமையை மீறும் செயல் என கூறி கடிதம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையல் மீண்டும் மதியம் 12 .00 மணிக்கு சென்ற மேற்படி பொலிஸ் அதிகாரி தமிழ் மொழியில் எழுதப்பட்ட கடிதத்தினை வழங்கிச் சென்றுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸிற்கு எதிராக செய்துள்ள முறைப்பாடு தொடர்பில் விசாரணை ஒன்று செய்யப்பட உள்ளதால் நாளை மாலை 4.00 மணிக்கு மட்டக்களப்பு உதவி பொலிஸ்மா அதிபர் காரியாலயம் வருமாறு அந்தக் கடிதத்தில் அவர் பணிக்கப்பட்டுள்ளார்.

19.04.2025 அன்று நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்வதற்கு எதிராக மட்டக்களப்பு, காத்தான்குடி, கொக்குவில் சந்திவெளி ஆகிய 4 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் சிவயோகநாதன் உட்பட மூன்று பேருக்கு எதிராக நீதிமன்ற தடை யுத்தரவு ஒன்றினை பெற்றிருந்தனர்.

இச்செயற்பாடானது தனக்கு இருக்கும் அடிப்படை மனித உரிமையை மீறும் செயல் என தெரிவித்து மேற்படி நான்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் எதிராக 21.04.2025 அன்று அவர் மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றினைப் பதிவு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் 13.06.2025 அன்று உதவிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்திற்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட அவர், மீண்டும் நாளை மாலையும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்

# 4 வயது சிறுமியின் சடலம் கால்வாயிலிருந்து மீட்பு

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெவோன் நீர்வீழ்ச்சிக்கு நீர் ஏந்தி செல்லும் கொட்டகலை ரொசிட்ட பகுதியில் உள்ள கால்வாயில் இருந்த 4 வயதுச் சிறுமி ஒருத்தியின் சடலம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டகலை, ரொசிட்டா தோட்டத்தை சேர்ந்த கிரேக்சிக்கா நெகோமி வயது (4) எனும் சிறுமியின் சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

பூப்புனித நீராட்டு நிகழ்வு ஒன்றுக்குச் செல்லவிருந்த நிலையில் தனது மகளுக்கு ஆடைகளை அணிவித்து தயார் நிலையில் வைத்துவிட்டு, சிறுமியின் தாய் தானும் தயாரகிவிட்டு சிறுமியை தேடிய வேளையில் அவரைக் காணவில்லை.

சுமார் மூன்று மணி நேரத் தேடுதலின் பின்னர் டெவோன் நீர்வீழ்ச்சிக்கு நீரை கொண்டு செல்லும் கால்வாயில் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் சுமார் 100 மீற்றர் தூரத்தில் பற்றை பகுதியில் சிக்கிய நிலையில் சிறுமியைச் சடலமாகக் கண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சடலம் கொட்டகலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. குறித்த நான்கு வயது சிறுமி வீட்டின் அருகாமையில் இருந்த கால்வாயில் தவறுதலாக வீழ்ந்து நீரில் அடித்து செல்லப்பட்டிருக்கலாமென திம்புள்ள பத்தனை பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# இருவேறு குற்றச்சாட்டுக்களில் தருமபுரத்தில் மூன்று பேர் கைது

தருமபுரம் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் அனுமதி பத்திரம் இன்றி கல்லாறு பகுதியில் இருந்து மணல் ஏற்றி பயணித்த இரண்டு டிப்பர் வாகனங்களும் அதன் சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

சனிக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்கள் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அதேநேரம், புதுகுடியிருப்பு பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி அனுமதியின்றிக் களவாகக் கொண்டுசெல்லப்பட்ட தேக்கு மர குற்றிகளை தருமபுரம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அதனை சூட்சுமமான முறையில் ‘கப்’ ரக வாகனத்தில் மறைத்து எடுத்துச் சென்ற சாரதியையும் அவர்கள் கைது செய்துள்ளனனர்.

மரக் கடத்தலில் ஈடுபட்ட சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி திஸாநாயக்க தெரிவித்தார். (316)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் வவுனியாவில் இளைஞன் சாவு

வவுனியா, பரசங்குளம் ஏ9 வீதியில் இன்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் உயிரிழந்துள்ளார் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் பரசங்குளம் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து மின்சார கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் குறித்த மோட்டார் சைக்கிள் சாரதியான கிளிநொச்சி, பாரதிபுரத்தை சேர்ந்த ஜெயசீலன் திவாகரன் (வயது 23) உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. 100

# உதயமாகும் புதிய அமெரிக்கா கட்சி : எலான் - டிரம்ப் உறவில் முறிவு

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



அமெரிக்க அதிபர் டிரம்பின் தீவிர ஆதரவாளராக இருந்தவர் எலான் மஸ்க். தற்போது டிரம்ப் -மஸ்க் இடையே தீவிர மோதல் ஏற்பட்டுள்ளது. இருவரும் மாறிமாறி விமர்சனம் செய்து வருகின்றனர். அமெரிக்க அதிபர் டிரம்பை நேரடியாக எதிர்க்க தொடங்கியுள்ள தொழிலதிபர் எலான் மஸ்க், 'தி அமெரிக்கா பார்ட்டி' (The America Party) என்ற பெயரில் புதிய கட்சி தொடங்க இருப்பதாக அறிவித்துள்ளார்.

இதேவேளை ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுக்கு நிதியுதவி செய்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என எலான் மஸ்குக்கு அதிபர் டிரம்ப் படுமோசமான எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எலான் மஸ்க் மிகவும் அவமரியாதைக்கு உரியவர். அது மிகவும் மோசமான விஷயம் என்று நான் நினைக்கிறேன். அவர் வெள்ளை மாளிகையை அவமரியாதை செய்தார். அவரால் நான் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளேன். நான் அவருக்கு நிறைய உதவி செய்திருக்கிறேன். அதிபர் பதவியை அவமரியாதை செய்ய முடியாது.

வரி குறைப்பு மற்றும் செலவு மசோதாவுக்கு ஆதரவாக வாக்களிக்கும் குடியரசுக் கட்சியினருக்கு எதிராக போட்டியிட ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுக்கு எலான் மஸ்க் நிதியுதவி செய்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும். மஸ்க் உடனான உறவுகளை சீர்படுத்தும் எண்ணம் இல்லை. நான் மற்ற வேலைகளைச் செய்வதில் மிகவும் கவனமாக இருக்கிறேன். அவரிடம் பேசும் எண்ணம் எனக்கு இல்லை. இவ்வாறு அதிபர் டிரம்ப் அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

### தி அமெரிக்கன் பார்ட்டி:

அமெரிக்க அதிபர் டிரம்ப்- எலான் மஸ்க் இடையிலான மோதல் உச்சகட்டத்தை எட்டியுள்ளது. டிரம்ப், எலான் மஸ்க் சமூக ஊடகங்களில் மாறி, மாறி குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருவதால் அமெரிக்க அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.




இந்த கருத்து மோதலின் தொடர்ச்சியாக, இருவரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி, பொதுவெளியிலேயே சமூக ஊடகங்களில் சண்டையிட்டு வருகின்றனர்.

இதனிடையே, 80 சதவிகித நடுத்தர மக்களை பிரதிநிதித்துவப்படுத்த புதிய கட்சி தேவையா? என்று எக்ஸ் தளத்தில் எலான் மஸ்க் கருத்துக் கணிப்பு நடத்தினார்.

இந்தக் கருத்துக் கணிப்புக்கு 80 சதவிகிதத்தினர் (56.30 இலட்சம் பேர்) 'ஆம்' என்று பதிலளித்தனர். அமெரிக்க மக்களின் இந்த பதில், சமூக ஊடகங்களில் பேசுபொருளாகியது.

இந்த நிலையில், புதிய கட்சிக்கு 'தி அமெரிக்கன் பார்ட்டி' என்று எலான் மஸ்க் பெயரிட்டு அறிவித்துள்ளார்.

### கொடுங்கோல் பட்டியலில் முதன்மை:

உலகளாவிய பொருளாதார மாயத்தைத் தூண்டுவதாலும், அணுவாயுத அச்சுறுத்தலை

உருவாக்குவதாலும், டிரம்ப் தனிப்பட்ட முறையில் மிக அபாயகரமானவராக இருக்கிறார். மேலும், நாளுக்கு நாள் அவர் உருவாக்கும் ஆபத்து அதிகரித்துக் கொண்டே போகிறது என்ற அச்சம் பலருக்கும் உள்ளது.

அமெரிக்க வரலாற்றில் அதிஉச்ச அடாவடித்தன ஆட்சிப் பட்டியலை எடுத்தால், டிரம்ப் அதில் முதலிடத்தைப் பிடிக்கிறார். சீரற்ற உலகத்தில் வலிமை வெறித்தனத்தில், இன்னும் பலர் தங்களையும் 'வலிமை ஆட்சி' அமைக்க ஆசைப்படும் ஆளுமைகளாக மாற்றிக் கொள்ளத் தத்தளிக்கின்றனர்.

முந்தையதும் இன்றையதும் என எல்லாக் கொடுங்கோலர்களுக்கும் விதி ஒன்று தான். வீழ்ச்சி தவிர்க்க முடியாதது. டிரம்பும் அந்த விதியில் இருந்து விலக முடியாதவராகவே இருக்கிறார்.

### டிரம்ப் பதவியேற்றதன் பின்னர்,

அமெரிக்க ஜனநாயகத்தின், அதன் சட்டங்களின், மதிப்பீடுகளின், கனவுகளின் மீது திட்டமிட்ட அழிவுத் தாக்குதல் நடத்தும் அவரது முயற்சியைத் தடுத்து நிறுத்த இயலுமா என்ற கேள்வி தற்போது தீவிரமாக எழுந்துள்ளது.

### டிரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டு:

அதிபர் டிரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டு குறித்து, எக்ஸ் தளத்தில் தான் பதிவிட்ட பதிவை எலான் மஸ்க் நீக்கியுள்ளார். பாலியல் குற்றத்தில் சிக்கியுள்ள ஜெப்ரி எப்ஸ்டைன் தொடர்பாக வெளியிடப்படாத ஆவணங்களில் அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் பெயர் குறிப்பிடப்பட்டதாக




எலான் மஸ்க் நேரடியாக குற்றம்சாட்டி, எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார்.

இதன் காரணமாகவே பொதுவெளியில் ஆவணங்களின் விபரங்கள் வெளியிடப்படவில்லை என்றும் தெரிவித்திருந்தார். எலான் மஸ்க்கின் இந்த செயலால் அதிருப்தி தெரிவித்திருந்த வெள்ளை மாளிகை, அதிபர் டிரம்ப் மீதான இந்தக் குற்றச்சாட்டு மிகவும் துரதிர்ஷ்டவசமானது என்று கூறியிருந்தது.

இந்த நிலையில், அதிபர் டிரம்ப் மீதான பாலியல்



குற்றச்சாட்டு குறித்த எக்ஸ்தளப் பதிவை எலான் மஸ்க் நீக்கியுள்ளார்.

### நிழல் ஜனாதிபதி மஸ்க் ?

அதிபர் ட்ரம்ப் பதவி ஏற்றதன் பின்னர், வாஷிங்டனில் உயர் அதிகாரிகளின் எதிர்ப்பை மீறி எலான் மஸ்க்கிற்கு கூடுதல் அதிகாரங்களை அளித்தமை அமெரிக்க அரசியலில் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

உலகின் முன்னணி பணக்காரரும் பிரபல தொழிலதிபருமான எலான் மஸ்க், அதிபர் தேர்தலில் ட்ரம்ப்பின் வெற்றிக்கு பெரிதும் துணை நின்றார். தேர்தல் வெற்றிக்குப்பின் அமெரிக்க அரசின் நிர்வாகத்தை முற்றிலும் சீர்திருத்தும் புதிய அமைப்பிற்கு தலைவராக எலான் மஸ்க்கை ட்ரம்ப் நியமித்தார்.

வெள்ளை மாளிகையில் ட்ரம்ப்புக்கு சமமாக அமர்ந்து பேசும் அளவுக்கு ட்ரம்புடன் மிக நெருக்கமான உறவுகளை பேணி வந்தார். எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் எலான் மஸ்க் தன் செயல்களை நியாயப்படுத்தி வந்தார்.

மேலும் மஸ்க் ஏற்கனவே எடுத்த பெரும்பாலான நடவடிக்கைகள் அமெரிக்க சட்ட விதிகளை தாண்டி எடுக்கப்பட்டுள்ள நிலையில் பல குழப்பங்களை ஏற்படுத்தியது.

அமெரிக்க அதிபர் டிரம்ப்பிடம் இருந்து அதிகாரங்கள் எலான் மஸ்க்கிற்கு கை மாறுகிறதா என்ற ரீதியிலும் அமெரிக்காவில் கேள்விகள் எழுந்தன. அதிபர் மட்டுமே பேட்டியளிக்கும் வெள்ளை மாளிகையில் இருந்து மஸ்க் பேட்டியளித்த நிலையில் 'பிரசிடெண்ட் மஸ்க்' என்றே சமூக வலைத் தளங்களில் பரலாக பரவி வந்தமைமையும் குறிப்பிடத்தக்கது

ஒருபுறத்தில் வலுவான இலட்சியமும், தொலை-நோக்கும் கொண்டு உலகை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் தொழில் வாண்மையாளராக எலான் மஸ்க் விளங்குகிறார். மறுபுறத்தில் தமது தொழில்நுட்பத்தைத் தாண்டியும் அரசியல் ஆதிக்கத்தை செலுத்த முனையும் அதிகார ஆளுமையை பிரயோகிக்க முயன்றார்.

தற்போது இதன் காரணமாக இருபெரும் ஆளுமைகள் இடையே பெரும் குழப்பமான சூழ்நிலை உருவாகி உள்ளது. ஒரு கட்டத்தில் நிழல் ஜனாதிபதியாக கருதப்பட்ட எலான் மஸ்க் தற்போது அமெரிக்க அதிபருடன் நெருக்கம் குறைந்து நேரடியாக மோதும் நிலமை ஏற்பட்டுள்ளது.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.07.2025இல் வெளியிடப்பெற்றது